# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.125/16 | Village | : | |
| Prosecution witness | : | PW-2 | Taluk | : | |
| Name | : | திரு. அழகர் | Occupation | : | |
| Father Name | : | திரு. | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 9.9.2025**

A1, A7 abated. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் மெலட்டூர் குச்சிபாளையத்தில் வசித்து வருகிறேன், குச்சி பாளையத்தில் டீக்கடை வைத்துள்ளேன்.இ றந்துபோன ஆறுமுகம் என் தம்பி ஆவார். அ.சா.1 முருகேசன் என் தம்பி ஆவார். நாங்கள் நான்கு தலைமுறையாக டீக்கடை வைத்துள்ளோம். பக்கத்தில் என் சகோதரர் முருகேசன் பால் கடையும் பெட்டிகடையும் வைத்துள்ளார். 25.5.2014 ஞாயிற்றுகிழமை 4 1/2 மணிக்கு அகரமான்குடியை சேர்ந்த சந்தோஷ், ஆனந்த், பிரதீப், மகாதேவன் ஆகியோர் தம்பி கடையில் பால் கேட்டார்கள். பார் தீர்ந்துவிட்டது என்று தம்பி மகன் சொன்னான். எனக்கே பால் தீர்ந்துவிட்டது என்று பார் என்று சந்தோஷ் சொல்லிவிட்டு போய் வருகிறேன் என்று போனார். 5 1/2 மணிக்கு சந்தோஷ், ஆனந்த், மகாதேவன், வினோத், கார்த்திக், சுரேஷ், பாலாஜி ஆகியோர் வந்தார்கள். என் தம்பியை பார்த்து உன்னை நான் கொலை செய்தால் யார் கேட்பார்கள் என்று கேட்டு என் மைத்துனர் கூத்தரசனை ஆனந்த் இரண்டு கைகளிலும், தொடையிலும் வெட்டினார். ஆறுமுகத்தை இரும்பு பிடி அரிவாளால் மகாதேவன் தலையில் வெட்டினார். சந்தோஷ்ம், பிரதீப்பும் இரும்பு பிடி போட்ட அரிவாளால் என்னை தலையிலும், கண்ணுக்கு மேலேயும் வெட்டினார்கள். வினோத், கார்த்திக், பாலாஜி, சுரேஷ் ஆகியோர் கட்டையால் மாறிமாறி என்னை அடித்தார்கள். மெலட்டூர் மருத்துவமனையில் என்னை சேர்த்தார்கள், தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் இந்திரன், ஜகதீசன் ஆகியோர் கொண்டுபோய் சேர்த்தார்கள். தம்பி முருகேசனை இரும்பு பிடி அரிவாளால் வெட்டி உடல் முழுக்க காயம். கூத்தரசனை இடது தொடை, இரண்டு

கைகளிலும் வெட்டி காயம். ஆஸ்பத்திரியில் அட்மிசன் போட்டு சிகிச்சையில் இருந்தோம். தம்பி ஆறுமுகம் 5ஆம் நாள் இரவு 8மணிக்கு இறந்துவிட்டார். ஆய்வாளர் வந்து விசாரித்தார். தம்பி முருகேசன்தான் புகார் சொன்னார். போலிஸார் அன்று இரவே வந்து மெடிக்கல்லில் வந்து விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னை யாரும் இரும்பு கம்பியால் தாக்கினாரா என்றால் இரும்பு பிடி போட்ட அரிவாளால் வெட்டினார்கள். டாக்டர் விசாரித்தபோது இரும்பு கம்பியால் தாக்கியதாக சொன்னேனா என்றால் இல்லை. தலையில் பிரதீப்பும், சந்தோஷ்ம் 4, 5 வெட்டுகள் வெட்டினார்களா என்றால் ஆமாம். போலிஸ் விசாரித்தபோது கார்த்திக் என்னை கட்டையால் அடித்ததாக சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னை குறிப்பிட்டு இரும்பு பிடி அரிவாளால் இரண்டு பேர் வெட்டியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். முன்னிலையாகியுள்ள எதிரிகளில் குறிப்பிட் அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் தற்போது அவர்கள் பெரியவர்கள் ஆகியுள்ளார்கள் அடையாம் காண்பிக்கமுடியாது. வெட்டினவர் பெயர், அவர் வயது ஆகியவற்றை போலிஸாரிடம் சொல்லியுள்ளோமா என்றால் சொன்னேன். என்னை கட்டையால் உடல் முழுவதும் 10, 15 அடி அடித்திருப்பார்களா என்றால் அதிகமாகதான் இருக்கும். அவ்வாறு அடித்ததால் என் கை, கால் முதுகில் வீக்க காயம் இருந்தது என்றால் ஆமாம். கூத்தரசன் மது அருந்தியிருந்தார் என்றால் இல்லை. சம்வத்தின்போது கூத்தரசன் மதுபோதையில் இருந்தார் என்றால் சரியல்ல. கூத்தரசன் சம்பவ காலத்தில் பாபநாசத்தில் இருந்தார் என்றால் இல்லை எங்களுடன் கூட்டு குடும்பத்தில் இருந்தார். நான் முதல்விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போதும் எதிரிகள் யாருடைய பெயரும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஜகதீசன் சொன்னதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.